*ஆய்வுக்கட்டுரை இல: 29*

# தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் நிலவளப் பயன்பாடு: ஓர் ஆய்வு

**M .Varatharajan[1], S.S.Uthayakumar[2]and S.T.B.Rajeswaran[3]**

*[1]Postgraduate Candidate in Economics,*
*[2]Department of Economic, University of Jaffna*
*[3]Professor in Geography, University of Jaffna*
*ssuthayan@yahoo.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் வளங்கள் இன்றியமையாதனவாக அமைகின்றன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வளங்கள் பயன்பாட்டிற்கு உட்படும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றன. குறித்த ஒரு நாடு வளங்களைப் பூரணமாகவும் வினைத்திறனுடையதாகவும் பயன்படுத்தப்படும் போது அப்பொருளாதாரத்தின் வளத்திரட்சி அதிகரிக்க ஏதுவாகின்றது. இதனால் விரைவான பொருளாதார வளர்ச்சியினையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். வளர்ச்சிடைந்து வரும் இலங்கையிலும் பொருளாதார உற்பத்திக்கான நிலவளங்களைச் சிறந்த முறையில் இனங்கண்டு அவற்றை உற்பத்தி செயன்முறைகளில் ஈடுபடுத்தும் போது வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நிலையினையும் வெகுவாகக் குறைக்க முடியும். அவ்வகையில் இவ்வாய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தின் பௌதீகவளங்களில் நிலவளப்பயன்பாட்டை இனங்காண்பதாகவும் அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்குரிய வழிமுறைகளை முன்வைப்பதாகவும் அதன் மூலம் பிரதேச அபிவிருத்திக்கான உத்திகளையும் ஆய்வு செய்கின்றது. இவ்வாய்வு முதலாம் இரண்டாம் நிலைத்தரவுகளை பயன்படுத்தி அளவு சார் மற்றும் பண்பு சார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்நிலைத் தரவுகளாக நேரடி அவதானம், நேர் காணல் கள ஆய்வு ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவு மூலங்களாக தென்மராட்சிப் பிரதேசசெயலக கையேடு,நில அளவைத்திணைக்கள அறிக்கைகள், நகரநசபை மற்றும் பிரதேசசெயலக கையேடுகள், இணையத்தளங்கள், மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், நூல்களும் சஞ்சிகைகளும் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் நோக்கம் மற்றும் முடிவிற்கிணங்க நில வளப்பயன்பாடுகள், முறையாகஇனங்காணப்பட்டதோடு அவற்றை வினைத்திறனாக பயன்படுத்திக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், முகாமைச் செயற்பாடுகள், பெறுபேறுகள் என்பனவும் கண்டறியப்பட்டுள்ளது. அதன்மூலம் பிரதேச அபிவிருத்திக்கான தந்திரோபாயங்களையும் முன்வைக்கின்ற வகையிலேயே இவ்வாய்வு அமைகின்றது.*

***முதன்மைச் சொற்கள்:*** *இயற்கை வளம், நிலவளப் பயன்பாடு, வினைத்திறனான வளப்பயன்பாடு, பிரதேச அபிவிருத்தி*

## ஆய்வின் அறிமுகம்

பொருளாதார ரீதியில் இயற்கை வளமான நிலம் மற்றும் மனித வளமான ஊழியமும் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியவையாகும். இயற்கை வளங்கள் சுற்றுச்சூழலில் இருந்து தருவிக்கப்படுபவை.

இவற்றின் பெரும்பான்மையானவை நம் வாழ்விற்கு அத்தியாவசியமானவையாகவும் பயன்படக் கூடியனவாகவும் அமையும். எனினும் இயற்கை வளங்களின் பண்புகள் அவைகளைச் சுற்றியுள்ள ஒரு குறிப்பிட்ட சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்து அதனைச்சார்ந்த உயிரினங்களின் வகைகள் மற்றும் அவைகளின் சுற்றுப்புறச் சூழ்நிலை பண்புகளின் வேறுபாட்டைப் பொறுத்து மாற்றமடைகின்றன.

ஆய்வுப் பிரதேசமானது நிலவளத்துடன் இணைந்த கடல் வளம் சார்ந்த உற்பத்திகள் பற்றிய கவனத்தையும் ஏற்படுத்தத் தூண்டுவதாகவுள்ளது. கடல்வள உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கான கைத்தொழில் வாய்ப்புக்களைக் கொண்டிருக்கவில்லை. இத்தகைய மீனவர் கைத்தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் பலருக்குச் சிறந்த தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதன் மூலம் பல குடும்பங்களின் வருமான மட்டங்களினையும் அதிகரித்துக் கொள்வதன் ஊடாக கடல் தொழில் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்திக் கொள்ள முடியும். மேலும் கடல் வளத்தில் இருந்து சக்தி பெறும் வாய்ப்புக்களும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ளன. கச்சாய், கெற்பேலி, சாவகச்சேரி கரையோரம், நாவற்குழி கடல்நீரேரி, கேரதீவு, சங்குப்பிட்டி, பூநகரி போன்ற பிரதேசங்கள் இத்தகைய வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன. இப்பிரதேசங்கள் குடாக்கடற் பரப்பிற்கு வாய்ப்பான கடல் நீரோட்டத்தைக் கொண்ட பகுதிகளாகவும் காணப்படுகிறது. இப் பகுதிகளில் பருவ காலத்திற்குரிய வற்றுப் பெருக்கு, நாளாந்த வற்றுப் பெருக்கு என்பவற்றை அடையாளம் காணலாம். இங்கு வற்றுப் பெருக்கு காலம், உபாயம் என்பன நன்கு அவதானிக்கப்பட்டு கடல்வள சக்தி முதல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது.

கடல் அலையைச் சக்தியாகப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நுட்பம் சிங்கப்பூரில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கடற் பரப்புக்கள், துறைமுகப் பிரதேசங்களில் மிதக்க விடப்பட்டுள்ளன. சிறிய மின் உற்பத்திச் சாதனங்கள் அப் பிரதேசத்தின் கடற்பரப்பை ஒளியூட்டிக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. அலையின் உதவியினால் மின் உற்பத்திச் சாதனங்கள் பொருத்தப்பட்டு ஒளி பெறப்படுகின்றது. அத்தகைய சக்தி வள வாய்ப்புக்களினால் பெறக்கூடிய நிலையினையும் ஆய்வுப் பிரதேசம் தன்னகத்தே கொண்டிருப்பதனை இனங்கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. இவை நன்கு ஆராயப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் சக்தி வழங்கக் கூடிய இலகுவான வழிகளைக் கண்டறிந்தவர்களாவோம். இவ்வாறு ஆய்வுப் பிரதேசமானது எல்லா வகையான அபிவிருத்திக்குமான அடிப்படை நிலவள மூலங்களைக் கொண்ட ஒரு பிரதேசமாக உள்ளது. .

## ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவில் தென்மராட்சிப் பிரதேசம் அமைந்துள்ளது. இவ் ஆய்வுப் பிரதேசமானது வடக்கே கோப்பாய், வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பிரிவுகளின் பகுதியையும் தெற்கே நல்லூர் பூநகரிப் பிரிவுகளின் சில பகுதிகளையும் கிழக்கே பச்சிலைப்பள்ளிப் பிரிவின் பகுதிகளையும் மேற்கே யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிவிரிவின் சில பகுதிகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதுடன் 60 கிராம சேவகர் பிரிவுகளையும் சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி நகரசபை என்ற உள்ளூராட்சி அமைப்புக்களையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நிலப் பரப்பானது 232.19 சதுர கிலோ மீற்றர் ஆகும். இது யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 22.69 சதவீதமாகும். இங்கு வாழும் தற்போதைய மொத்தக் குடும்பங்கள் 22123 ஆகவும் சனத்தொகை எண்ணிக்கை 72768 ஆகவும் உள்ளது. யாழ்ப்பாணம் கண்டி பிரதான வீதியும் (A9) மற்றும் யாழ்ப்பாணம் மன்னார் (A32) வீதியும் ஆய்வுப் பிரதேசத்தின் ஊடாகச் செல்கின்ற பிரதான வீதிகளாகக் காணப்படுகின்றது. அத்துடன் இவ் ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து கொழும்பு நகரம் வரையான தூரம் 320 கிலோமீற்றர் ஆகும்.

## ஆய்வுப் பிரச்சினை

பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளில் அடிப்படையான ஓர் வளமாக நிலவளம் காணப்படுகின்றது. சமூக, பொருளாதார, சூழல் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலை இத்தகைய நில வளத்திலேயே தங்கியள்ளது. ஆய்வுப் பிரசேதம் போதியளவான நிலப்பரப்பைக் கொண்டுள்ள போதிலும் அவை தொடர்பாக காணப்படும் பிரச்சினைகள் அவற்றின் பயன்பாட்டிற்கு இடையூறாக அமைகின்றது. எனவே குறித்த நோக்கத்தை அடைவதற்கு முதலில் ஆய்வுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இனங்காண வேண்டும். இவ்வகையில் இந்த ஆய்வும் சில ஆய்வுப் பிரச்சினைகளைக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

1. குறித்த சில நிலவளங்கள் எவ்வித மனித நடவடிக்கைப் பயன்பாடுகளும் இல்லாது வெறுமனே காணப்படல்.
2. இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படாத நிலங்கள் காணப்படல்.
3. விவசாயம் மற்றும் குடியிருப்பு நிலங்களாகப் பயன்படுத்த முடியாத நிலவளங்கள் காணப்படல்.
4. திட்டமிடப்பட்ட வகையிலான நிலப் பயன்பாட்டு முறைகள் இல்லாமை.

## ஆய்வின் நோக்கம்

ஆய்வானது சரியான இலக்கை நோக்கிச் செல்வதற்கு அதன் நோக்கம் துணைபுரியக் கூடியதாகக் காணப்படுவதோடு தெளிவான பாதையைக் காட்டக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். எனவே தென்மராட்சிப் பிரதேசத்தினை மையப்படுத்திய இவ்வாய்விற்கான நோக்கங்களைக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

1. மனித தேவைகள் மற்றும் மனித நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக் கூடியதான நில வளங்களை அடையாளம் காணல்.
2. நிலவளங்கள் சில பயன்படுத்தப்படாமலிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
3. பயன்படுத்தப்படாதிருக்கும் நிலங்களை பயன்பாட்டில் உட்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.
4. நில வளத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளல்.
5. பிரதேச அபிவிருத்தி நோக்கி நிலவளத்தைப் பயன்படுத்துவதற்கான உபாயங்களை முன்வைத்தல்.

## இலக்கிய மீளாய்வு

கேதீஸ்வரன்.அ (2001) அவர்கள் தமது கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப்பாசன விவசாயம் மற்றும் அதன் முகாமை தொடர்பான ஆய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஆய்வை மேற்கொண்டுள்ளார். ஆய்வின் முடிவில் நீர்ப்பாசன முறைகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்குச் சிறந்த முகாமை அவசியம் எனவும் அதன் மூலமே சிறுபோக நெல் விவசாயத்தை ஊக்குவிக்கக் கூடியதாகவும் அதி கூடிய விளைச்சலைப் பெற முடியும் எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் இந்த உள்ளூர் நீர்வளமானது விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதனூடாக நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

கமலநாதன்.கா (2012) அவர்கள் தமது வரணியின் மரபுரிமைகள் என்னும் தமது இரண்டாம் நிலைத் தரவுகள் ஊடாகப் பெறப்பட்ட ஆய்வில் தென்மராட்சிப் பிரதேசத்தின் நீர்வளம் மற்றும் நிலவளம் என்பவற்றை இனங்கண்ட வகையில் தமது ஆய்வை மேற்கொண்டுள்ளார். அத்துடன் இந்த வளங்களை மக்களின் தேவை கருதி பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தினையும் ஆய்வில் வலியுறுத்தியுள்ளார்.

பிரதீபராஜா.நா, இராஜேந்திரம்.க மற்றும் குகபாலன்.கா (2012) ஆகியவர்களின் ஆய்வில் சூறாவளி, வெள்ளப்பெருக்கு என்பவற்றினால் பாதிப்பிற்குட்பட்ட வளங்களினையும், வளப் பாதிப்புக்களைத் தவிர்க்கக் கூடியதான ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளனர். மேலும் அபிவிருத்திசார் நிலைமைகளை முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.

Joseph.P.Kalt, Timorthy (2005) ஆகியவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வும் யப்பான் நாட்டின் உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றது. வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டின் மூலம் பொருளாதாரம் தனது இலக்குகளை அடைந்து கொள்ள முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Avrom Bendavid, Valkarl Birkolzen (2005) போன்றோரின் ஆய்வு உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி பற்றியும் மற்றும் அவற்றிற்கான திட்டமிடல் தொடர்பான செயற்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்துள்ளனர். இதற்கு ஆய்வாளர்கள் அமெரிக்கப் பொருளாதாரத்தையும் தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் மையமாகக் கொண்டுள்ளனர். ஆய்வாளர்கள் வெவ்வேறு நாட்டுப் பொருளாதார அறிஞர்களின் கருத்தியல் ரீதியான தரவுச்சேகரிப்பு மூலமும் குறித்த நாடுகளின் இரண்டாம் நிலைத் தரவுப் பகுப்பாய்வுகளின் அடிப்படையிலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வேறு பல்கலைக்கழக ஆய்வுத் தகவல்களையும் (உ-ம் : Technical University of Berlin) இதற்காகப் பெற்றுள்ளனர்.

இந்த ஆய்வாளர்களது முடிவாக அபிவிருத்திக்கான தந்திரோபாயங்கள், அபிவிருத்தி மீதான பாதிப்புக்கள் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கான காரணிகள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Katsuaki Takai & Morhiko Hiramatsu (2012) ஆகியோரின் ஆய்வில் யப்பான் நாட்டின் உள்ளூர் வளப்பயன்பாடு பிரதேச ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பாக ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆய்வு முறையியலாக பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய வளங்களுடன் தொடர்புடைய நிறுவன அமைப்புக்களுடாக பெறப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகள், கள ஆய்வுகள் என்பவற்றின் மூலம் தகவல்களைத் திரட்டி அவர்களின் முடிவுகள் பெறப்பட்டது.

ஆய்வாளர்களது முடிவாக இத்தகைய உள்ளூர் வளப் பயன்பாட்டில் மக்களின் ஈடுபாடும் அரசின் பங்கும் முக்கியமானதாக இருக்க வேண்டும் எனவும் அதன் மூலமே உயர் பொருளாதார வளர்ச்சியை அல்லது பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்துடன் ஒரு கிராமத்தின் வளர்ச்சி உற்பத்தி அசைவுகளிலேயே "One Village, one product Movement" எனவும் வெளிப்படுத்தப்பட்டது. இத்தகைய வெற்றிக்கு சிறந்த திட்டமிடலும் ஒருங்கிணைந்த தலைமைத்துவச் செயற்பாடும் அவசியம் எனவும் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

ஒரு ஆய்வாளன் தனது நோக்கத்தை அடைவதற்கு ஆய்வு முறையியல் பிரதான பங்கு வகிக்கின்றது. தரவுகள் மூலம் இவ்வாய்வுக்குத் தேவையான வழிமுறைகளையும் நுட்பங்களையும் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாய்வு பௌதிக வளம் மற்றும் இயற்கை வளம் சார்ந்த உள்ளூர் வளங்களாக இருப்பதனால் அவை சார்ந்த தகவல்களும் பெறப்பட்டுள்ளது. அத்தோடு எண் ரீதியான மற்றும் பண்பு ரீதியான தரவுகளும் பெறப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தைக் கவனத்திற் கொண்டு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

### தரவு சேகரிப்பு முறைகள்

இருவகையான தரவு சேகரிப்பு முறைகளும் இங்கு கையாளப்பட்டுள்ளது. ஆய்வுக் களத்திற்குச் சென்று நேரடியாக ஆய்வாளரால் திரட்டப்பட்ட தரவுகளாக முதலாம் நிலைத்தரவுகள் உள்ளது. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல் முறை, அவதானிப்பு முறை, கலந்துரையாடல் முறை போன்றவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலர் (தென்மராட்சி), கமநல சேவை அதிகாரி (சாவகச்செரி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் (பிரதேச செயலகம் - தென்மராட்சி) போன்வற்களிடமிருந்து நேர்காணல்கள் மூலமாகத் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. மற்றும் தனங்களப்பு மறவன்புலோ, கச்சாய். வரணி, மட்டுவில், கைதடி போன்ற பிரதேசங்களில் நேரடி அவதானிப்புக்கள் மூலம் கள ஆய்வுத் தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற வகையில் நூல்கள், தென்மராட்சிப் பிரதேச செயலக அறிக்கைகள், கையேடுகள், சஞ்சிகைகள் போன்றவற்றின் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் வெளியிடப்படாத ஆக்கம், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என்பவற்றிலிருந்து பெற்ற தரவுகளும், பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக் களத்திற்கு நேரடியாகச் சென்று தகவல் பெறப்பட்டதால் புகைப்படங்கள் பெறப்பட்டது. இது ஆய்வுக்கு மேலும் துணை செய்யக் கூடியதாக இருந்தது.

### தரவுப் பகுப்பாய்வு

மேற்படி பெறப்பட்ட தரவுகளானது SPSS முறையான எளிய புள்ளிவிபரவியல் முறையினூடகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைபடங்கள், அட்டவணைகள் என்பவற்றின் மூலமாகவும் சுருக்கமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. GIS என்பன மூலம் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டு அதன் நோக்கங்களை அடைய முடிந்தது.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

ஆய்வுப் பிரதேசமானது யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 22.69% வீதத்தினைக் கொண்ட பெரியதொரு பிரசேதமாக விளங்குகின்றது. இத்தகைய பெரு நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் நிலவளத்தின் பயன்பாட்டுத்தன்மையானது பல நிலைகளில் காணப்படுவதனை அவதானிக்க முடிந்தது. அத்துடன் அவற்றின் பயன்பாட்டு வீதங்களினையும் ஆய்வின் மூலம் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

**அட்டவணை 1. நிலப் பயன்பாடு**

| நிலத்தின் பயன்பாடு | பயன்பாட்டு வீதம் |
|---|---|
| | 2014 |
| கட்டிடங்கள் | 4.25% |
| விவசாயமல்லா நிலங்கள் | 0.66% |
| குடியிருப்பு நிலம் | 16.81% |
| மரங்கள் மற்றும் ஏனைய தாவர வகை | 5.85% |
| வயல் நிலம் | 19.45% |
| பயிர் செய்கை நிலம் | 31.57% |
| புதர் நிலம் | 4.69% |
| புல் நிலம் | 2.51% |
| சதுப்பு நிலங்கள் | 0.92% |
| நீர் நிலை | 12.30% |
| ஏனையவை | 0.99% |
| **மொத்தம்** | **100.00%** |

மூலம் : தென்மராட்சி பிரதேச செயலக அறிக்கை – 2015

நிலத்தின் தன்மைகளின் அடிப்படையில் அவற்றின் பயன்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளது. கட்டிடங்கள், விவசாயமல்லா நிலங்கள், குடியிருப்பு நிலம், மரங்கள் மற்றும் ஏனைய தாவர வகை நிலங்கள், விவசாய நிலங்கள், புதர்நிலம், புல் நிலம், சதுப்பு நிலம், நீர் நிலைகள், ஏனையவை என்ற வகைகளில் அவற்றைக் கண்டுகொள்ள முடிந்தது. இத்தகைய நில வளங்களில் சிலவகை நிலங்கள் பயன்படுத்த முடியாதவையாகவே காணப்படுகின்றன. புதர்நிலம், புல்நிலம், சதுப்பு நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் ஏனைய நிலங்கள் என்பவை மனித நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாத நில வளங்களாகவே உள்ளன.

இவற்றில் புதர் நிலங்கள் 4.69% மாகவும் புல் நிலங்கள் 2.51% மாகவும், சதுப்பு நிலங்கள் 0.92% மாகவும் நீர் நிலைகள் 12.3% மாகவும் ஏனையவை 0.99% மாகவும் உள்ளன. நீர் நிலப்பகுதிகளில் பெருமளவான பகுதிகள் கடல் நீரேரிப் பகுதிகளாகும். ஏனையவை என்ற

நிலப்பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நிலப் பகுதிகளே அவையாகும். இத்தகைய பயன்பாடற்ற நிலங்களை மனித தேவைகளுக்காகப் பயன்படுத்தும் போது அவை பிரதேச அபிவிருத்தி நோக்கில் பயன்மிக்கவையாக அமையும்.

இவ்வாறு பயன்பாடு அற்றவையாக்க காணப்படும் நிலங்களை பயன்பாட்டு நிலங்களாகப் பயன்படுத்துவதற்குப் பல்வேறுபட்ட வழிமுறைகளைப் பயன்படுத்த முடியும். புல்நிலங்கள், புதர் நிலங்கள் என்பவற்றை மண் ஆராயச்சி நிபுணர்களின் உதவியுடன் விவசாயப் பயிர்ச்செய்கை நிலங்களாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எதிர்காலத்தில் சனத்தொகை அதிகரிப்பு அதனால் ஏற்படும் மனித தேவைகளின் அதிகரிப்பு என்பவற்றிற்கேற்ப அவை குடியிருப்பு நிலங்களாகவோ, கட்டிட அமைப்புக்கள் கொண்டவையாகவோ, வீதி அகலிப்புப் பணிகளுக்காகவோ பயன்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்படுவதனால் அவற்றைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மறுபுறத்தில் வீதி அகலிப்புப் பணிகளுக்காக நிலவளம் பயன்படுத்தப்படும் போது வீதிகளை அண்மித்த குடியிருப்புக்களிலும் மாற்றங்கள் ஏற்படக் கூடியதான வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படும்.

நில வளமானது மனித செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. கட்டிடங்கள், குடியிருப்புக்கள், வயல் நிலம், பயிர்ச்செய்கை நிலம் போன்ற நிலவளங்கள் மனித செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுபவையாகும். குடியிருப்பு நிலப்பகுதிகள் என்னும் போது சந்தைகள், வீதிகள், கைத்தொழில்களுக்கான நிலப் பகுதிகள், வர்த்தக நிலப்பகுதிகள், பொழுதுபோக்கிடங்கள் மற்றும் பொதுநலப் பயன்பாட்டுச் சேவைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும். இத்தகைய தேவைகளின் நிமித்தம் நிலவளமானது பயன்படுத்தப்படும் போது பொருளாதார நல நோக்கிலே பொருளாதார அபிவிருத்திக்கும் வழிசமைக்கின்ற வகையில் முக்கியத்துவம் பெறுவதனால் அவை திட்டமிடப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

மனித நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள நிலங்களை ஒட்டுமொத்தமாக அவதானிக்கும் போது இருபிரிவாகக் குறிப்பிடலாம்.

1. நீர்ப்பற்றாக்குறையான நிலங்கள்
2. பருவகால வெள்ளப்பெருக்குள்ள நிலங்கள்

இத்தகைய நிலவளங்களைப் பயன்படுத்துவதற்கு சில பரிந்துரைகளை முன்வைக்கக் கூடியதாகவுள்ளது. நீர்ப் பற்றாக்குறையான நிலப்பரப்பில் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்தி குடியிருப்புத் திட்டங்களை அமைக்க முடியும். வரணி, மறவன்புலவு, கைதடி, மிருசுவில் போன்ற இடங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும். குடியிருப்புத் திட்டங்கள்

அமைக்கப்படும் போது ஆகக் குறைந்தது நூறு வீடுகள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கும் போதுதான் குறித்த ஒரு குடியிருப்பிற்கான சேவை மையங்களின் தொழிற்பாட்டிற்கு இயங்கு நிலை சனத்தொகை இருக்கும். இயங்கு நிலை சனத்தொகை இருக்கும் போது அவற்றின் தொழிற்பாடு துடிப்பானதாக அமையும்.

ஆய்வுப் பிரதேசம் நீண்ட கடனீரேரிப் பகுதியினைக் கொண்டிருப்பதால் அதாவது மொத்த நிலப் பரப்பில் 10.26 வீதம் கடனீரேரிப் பகுதியாகக் காணப்படுவதால் பருவகாலங்களில் இதனோடண்டிய நிலப்பகுதிகளில் வெள்ளம் நிற்பதால் இப்பரந்த வெளிகள் பயன்பாடற்ற நிலமாக உள்ளன. இப்பகுதியைத் துறைசார் நிபுணர்களின் உதவியுடன் நில மீட்சிப் பொறிமுறைக்கு உட்படுத்தினால் 200 ஹெக்டேயர் நிலப்பரப்பு கிடைக்கும். இதனை கடற்கரை முகப்பு அற்ற கிராமங்களில் வாழும் மக்களிற்கு வழங்குதல் அல்லது மாற்றுத்திட்ட மீள் பொறிமுறைச் செயற்பாடுகள் மூலம் பொருளாதார, சமூக ரீதியில் மேம்பாடு காணக் கூடிய திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். மேலும் நீர்வற்றுப் பெருக்குள்ள உலர் நிலப்பகுதிகளில் உப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க மடியும். கச்சாய், சாவகச்சேரி, நாவற்குழி போன்ற இடங்கள் இதற்கு உகந்தவையாக்க காணப்படுகின்றன. இதற்கான உப்பு உற்பத்தி மையம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் பலருக்குத் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு பிரதேச அபிவிருத்தி நோக்கி நிலவளங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் பேண்தகு அபிவிருத்திக்கும் இட்டுச் செல்வதாக அமையும்.

## முடிவுரை

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்திய இவ்வாய்வின் அடிப்படையில் நிலவளங்களை இனங்கண்டுள்ளமை மட்டுமல்லாது அவற்றை முறையாக பிரதேச அபிவிருத்தி நோக்கி பயன்படுத்த வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இயற்கை வளங்களை அவற்றின் சீரழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும். வாழும் சூழலைப் பாதுகாக்கும் முறை என்பது நிலங்களைப் பாதுகாத்து கண்காணிக்கும் முறையில் ஈடுபட வேண்டும். அறிவியல் பொருளாதாரம் மற்றும் வளங்களைப் பாதுகாக்கும் முறை ஆகியவற்றைக் கொண்டு ஆராயும் நிலை வளர்ச்சியடைய வேண்டும். இயற்கை நமக்கும் தந்த வளங்களை சிறப்பாக முகாமை செய்வதன் மூலம் பேண்தகு அபிவிருத்திக்கான பாதுகாப்பையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். நிலம், நீர், மண்வகைகள், செடிகள், மற்றும் காடுகள் ஆகிய இயற்கை வளங்கள் நிலவளத்துடன் இணைந்தவையாகும். அதனால் இவற்றை வாழ்க்கைத்தர முன்னேற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் முகாமைத்துவம் செய்வது அவசியமானதாகும். இயற்கைவள முகாமைத்துவம் நிலைபேறான முன்னேற்றக் கருதுகோளுடன் நிலங்களை கையாளும் முறை மற்றும் சுற்றுச் சூழல் பரிமாணம் என்பன ஏற்படுத்தப்படல் வேண்டும். பிரதேச அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு

அமைய சுற்றுப்புறச் சூழலைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் ஆய்வுப் பிரதேசத்தினை பேண்தகு அபிவிருத்தியின் திறவு கோலுக்கும் அழைத்துச் செல்ல முடியும்.

அபிவிருத்தி மற்றும்வளர்ச்சி என்பவற்றை பொருளாதாரத்தில் ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துவதுநில வளங்களும் அவற்றின் உற்பத்திச் செயற்பாடுகளுமே ஆகும். ஆய்வுப் பிரதேசத்தின் விவசாயத் துறையில் உணவுத் தேவை கருதியே நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள் என்பன முதன்மை பெறுவதாகக் காணப்படுகின்றது. இதற்கு நிலவளமே பிரதானமாகின்றது. பிரதேச பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம் மற்றும் சுயதொழில் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தந்திரோபாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் சிற்றளவிலான விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப நிறுவனங்களின் வேகமான வளர்ச்சியை ஏற்படுத்தல், வேலை வாய்ப்பை மையமாகக் கொண்ட அபிவிருத்தி ஊடாக உள்@ர் வள உற்பத்திகளுக்கான கேள்வியினை அதிகரித்தல், விவசாயம் அல்லா மற்றைய பொருளாதாரத் துறைகளுக்கான ஊழிய வழங்கல்களை அதிகரித்தல் என்பவற்றின் மூலம் உள்ளூர் நிலவளப் பயன்பாட்டினை அதிகரித்துக் கொள்ள முடியும். உள்நாட்டு யுத்த சூழ்நிலைகளின் வடுக்களில் இருந்து விடுபடுவதன் மூலமே இதனைச் சிறப்பாக ஏற்படுத்திக் கொள்ள முடியும். இலங்கையின் அபிவிருத்தியானது உள்@ர் நிலவள பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலமாக இடம்பெற வேண்டும். அபிவிருத்தி அடையப்பட வேண்டும் என்ற நோக்குடன் வள ஒதுக்கீடு, வளப்பகிர்வு மற்றும் வளத் திரட்டல் போன்றவை தொடர்பாக அரச தலையீட்டின் அளவினையும் அதிகரித்துக் கொள்ளல் வேண்டும். பிரதேச ரீதியில் மக்களின் வருமானத்தினையும் சேமிப்பினையும் அதிகரிப்பதும் இதற்கு ஏதுவானதாகும். இதன் மூலம் முதலீட்டின் அளவினையும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தின் நிலவளப்பயன்பாட்டினை முறையாக இனங்கண்டு அவற்றை வினைத்திறகான பயன்பாட்டிற்கு உட்படுத்துவதன் மூலம் சூழல் பாதிப்புக்களையும் தவிர்த்து சிறந்த வள முகாமையினையும் ஏற்படுத்தி செயற்படும் போது பிரதேச அபிவிருத்தி மட்டுமன்றி பேண்தகு அபிவிருத்தியினையும் நிலை நிறுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும் எனில் மிகையாகாது.

## உசாத்துணைகள் :Reference


சிங்கரத்தினம்.பொ (2010) "சந்தைத் தோட்டப் பயிர்ச் செய்கையும் நிலத்தின் தரங்குன்றலும் - இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்ட ஆய்வு.

றெயினோட்.எல் (2014) "பருநிலைப் பொருளாதார இலக்கிளை அடைந்து கொள்வதில் இலங்கை எதிர் நோக்கும் சவால்கள்" - அபிவிருத்திப் பொருளியல் இளம் பொருளியலாளர் மன்ற வெளியீடு.

தவசீலன்.இ (2009) "கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கு நிதி நிறுவனங்களின் பங்களிப்பு அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்கள் பற்றிய ஆய்வு".

Timothy.J.Bartik - 2003, Local Economic Development Polices.

Kalt.P - 2005, Tow Approaches to Economic Development of American Indian Reservations.

Katsuaki Takai - Endogenous Regional Development Utilizing Local Resources in Japan.
Saxena.G.N - 2012, Supporting local development through cooperatives Indian perspective.
Ramesh.J - 2011, Greeing rural Development in India - UNDP
Karl Birkholzer - 2001, Local Economic Development and its potential.
Asebayo oyeronke covenant university Nigeria., adebayo oyeronke Yahoo.com
Inernational Training Course in Regional Development UNCRD, Nagoya, Japan - 2012
William's.K - 2010. Economic Resources and Local Economic Development.